# பெரியபுராணத்தில் விருந்தோம்பல் பண்பாடு

4

**அ.பா. நவீன் குமார் & முனைவர் தி. பெரியசாமி**
**தமிழ்த்துறை,பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636 011.**
**மின்னஞ்சல் : crazynaveen1999@gmail.com, drtperiasamy@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

நம் முன்னோர்கள் தனக்கென எதையும் சேகரிக்காமல் பிறருக்காக சேமித்து கொடுக்கும் வழக்கம் இருந்தது. பிறருக்காக வாழ்வதே உண்மையான வாழ்க்கை என்று உணர்ந்து வாழ்ந்தார்கள். அவ்வாழ்விற்கு எத்துணை துன்பம் ஏற்ப்பட்டாலும் அதனை பொருட்படுத்தாமல் அவர்கள் மேற்கொண்ட தொண்டினை செவ்வனே செய்து வந்தார்கள் என்பதனை பெரியபுராணம் கூறுகிறது. பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் விருந்தோம்பல் என்னும் உயரிய தொண்டினை மேர்கொண்டு வாழ்ந்த்தை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**திறவுச்சொற்கள் :** விருந்து, பண்பாடு, தொண்டு, திருவமுது,இறைநிலை.

**முன்னுரை**

பண்டைத்தமிழர் மேற்கொண்டொழுகிய பண்புகளில் விருந்தோம்பல் தனிச்சிறப்புடையது. தம்மிடம் அடைந்தார் யாராயினும் அவர்களை இன்முகம் காட்டி வரவேற்று, இன்சொல் கூறி, தம்மிடம் உள்ளதை ஆர்வமுடன் பகுத்துக் கொடுத்து மகிழும் வாழ்வே பண்பட்ட வாழ்க்கையாகும். தன்னை அடைந்தவர்களின் துன்பம் கண்டு மனமுருகி துன்பம் தீர்க்க முந்தும் அருள் உணர்வே சிறந்த செல்வம் என அன்று சான்றோர் வலியுறுத்தினர். இதன் அடிப்படையில் வளர்ந்ததே விருந்தோம்பல் பண்பாடு. விருந்தோம்பற் பற்றிய தமிழர் கொள்கைகளை சங்க நூல்களும், அவற்றுக்கு முந்தைய தொல்காப்பியமும், திருக்குறளும், பிற்காலத்துக் காப்பியங்களும் காட்டுகின்றன. ‘விருந்து’ என்னும் சொற்குப் புதுமை என்பதே பொருள். எனவே, முற்றிலும் புதியவராக தம்மிடம் வந்தோரைப் பேணுதலையே விருந்தோம்பல் என்று தமிழர் கருதியமை புலப்படும். இவர்கள் இரு வகையினர் என்றும் முன்பே நமக்கு அறிமுகமானவரும் அறிமுகம் ஆகாதவரும் விருந்தினரே என்றும் பரிமேலழகர் கூறுவார். முதல் வகையில் உறவினரும் நண்பரும் அடங்குவர். இவருக்கு சிறப்பு செய்தல் யாருக்கும் இயல்பு. எனவே, அடியார்க்குச் செய்யும் சிறப்பே மேலானது. இந்த அறத்தின் மேன்மை உணர்ந்த வள்ளுவர் இதற்கென ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். அவ்வகையில், விருந்தோம்பல் பண்புகளை வலியுறுத்திய இலக்கியங்களில் பக்தி இலக்கிய மார்க்கத்தில் அறநெறிகளை பெரியபுராணம் வலியுறுத்திய விருந்தோம்பல் பண்பினை ஆராயும் முகத்தால் இவ்வாய்வின் பொருண்மை அமைகிறது.

**பண்பாடு பற்றிய விளக்கம்**

பண்பாடு என்ற சொல்லுக்கு “குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன்

தொடர்பு கொண்டிருக்கும் மொத்தமேயாகும்."(ப-887) இன்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது. மேலும், நர்மதாவின் தமிழ் அகராதி பண்பாடு பற்றி கூறும் போது "குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும் மக்களின் சிந்தனை வெளிப்பாடு ஆகும்"(ப-570) எனக் கூறுகிறது.

**பெரியபுராணம்**

"வித்துமிடல் வேண்டுங்கொல்லோ" என்ற குறளுக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் இளையான்குடி மாறனார். மாரிக் காலத்து இரவில் தன்னை நோக்கி வந்த சிவனடியாருக்கு வயலில் விதைத்த முளை நெல்லை அரித்து கொணர்ந்து, குத்திச் சோறாக்கி, குழி நிரம்பாத புன்சைப் பயிரை கீரையாகச் சமைத்து உணவு ஊட்டினார். அப்பூதி அடிகளாரும் அவரது துணைவியாரும் மகன் இறந்ததையும் பொருட்படுத்தாது அப்பர் பெருமானுக்கு உணவு படைக்க முந்தினர். கலிக்காமரது துணைவியார் தமது கணவன் இறந்து போனதையும் மறைத்து வைத்து சுந்தரரை அன்புடன் வரவேற்றார். சிறுத்தொண்டர் தனது ஒரே மகனை அறுத்து சிவனடியாருக்கு ஊட்ட தயங்கியதில்லை. இவ்வாறு பெரியபுராணம் விருந்தோம்பல் பண்பாட்டினைப் போற்றுகிறது.

**சிறுத்தொண்டர்**

காவிரித் திருநாட்டில் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர். இவரது இயற்பெயர் பரஞ்சோதியார். இவர் ஆயுர்வேதக் கலையிலும், வடநூற் கலையிலும், படைக்கலத் தொழிலிலும் நிரம்பிய பயிற்சி உடையவர். தம் மனை அறத்திணை நிகழ்த்தி நாள்தோறும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்துப் பின்பு தான் உண்ணும் வழக்கத்தினை மேற்கொண்டவர்.

**நறைஇதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்**
**முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்**
**நிறையுடைய பெருவிருப்பால் நியதியாகக் கொள்ளும்**
**துறைவழுவாவகையொழுகுந்தூயதொழில்தலைநின்றார்.**

**(பெரி.பா.3672)**

சிவன் கொன்றை மலர் மாலையினை அணிந்தவன். அவனது புகழினை வாயாரப் நாள்தோறும் பாடி, அடியவர்க்கு திருவமுது ஊட்டி, அதனை முறையாகச் செய்து இருப்பதனை பெரும் பயனாக கருதி சிறுதொண்டர் வாழ்ந்துவந்தார். மேலும்,

**தூயதிரு அமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்**
**பாய்தயிர் பால்இனிய பண்ணியம்உண் ணீரமுதம்**
**மேயபடி யாலமுது செய்விக்க மிசைந்தடியார்**
**மாயிருஞாலாம் போற்ற வரும்இவர்பால் மனமகிழ்ந்தார்.**

**(பெரி.பா. 3673)**

தூய்மையான திருவமுது, கனிவகை, சர்க்கரை, ஆறு வகையான அறுசுவைகளைக் கொண்ட கறிவகைகள், நெய், தயிர், பால், இனிய பலகாரங்கள் முதலியவை

திருவடியார்களுக்கு அமுதுண்டு மனமகிழ்ச்சி கொள்வார் என பதிவு செய்துள்ளார் சேக்கிழார். மேலும், அடியார் பெருமக்களை அமரச்செய்து உணவுகளை அமரச் செய்து உணவுகளைப் படைத்தப் பின்,

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலும் பூமிசை**
**என்னம் பாலிக்கும் மாறுகண்டின்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.**

**(நாவு. தே- பா. 282)**

என்னும் பாடலைப் பாடுவது என்பது மரபாக இருப்பதனை நாவுக்கரசர் தன் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

**இளையான்குடி மாறநாயனார்**

நாயனாரும் அவர் மனைவியாரும் தனக்கென எதுவும் இல்லாத நிலையிலும், இறைவன் அடியவர் போல வேடம் பூண்டு நள்ளிரவில் பசி என்று வந்தபோது கழனியில் விதைத்த நெல்லை கொண்டு குப்பைக்கீரைக்கறியோடு விரும்பிய பணியினை மேற்கொண்டனர் என்பதை பெரியபுராணம் காட்டுகிறது. இப்பண்பிணை விளக்கும் விதமாக,

**அழுத்திய இடருள் நீங்கி அடியேன் உய்ய என்பால்**
**எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய்தருள்க என்று**
**தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுத்து தோன்றச்**
**செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார்.**

**(பெரி.பா. 463)**

என்ற பாடல் அமைகிறது. அடியவராக வந்த இறைவனுக்கு அமுது அளிக்க முடியாததை எண்ணி வருந்திய இளையான்குடி மாறநாயனார் தன் மீது சின மோ, வருத்தமோ கொள்ளாது. எளியவனின் பசி தீர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவதை சேக்கிழார் பதிவு செய்கின்றார்.

**அப்பூதி அடிகள்**

சோழ நாட்டில் திங்களூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். திருநாவுக்கரசரைக் காண்பதற்கு முன்னமே அவருடைய திருவடிகளை அரணாக பற்றி அவரை காண வேண்டும் என்ற ஆர்வத்தில் வாழ்ந்தவர்.

**கடிது வந்து அமுது செய்யக் காலம் தாழ்கின்றது என்றே**
**அடிசிலும் கறியும் எல்லாம் அழகு உற அணைய வைத்துப்**
**படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து எழுந்து அமுது செய்து எம்**
**குடி முழுதும் உய்யக் கொள்வீர் என்று அவர் கூறக் கேட்டு.**

**(பெரி.பா. 1817)**

திருநாவுக்கரசர் முன்சென்று வீழ்ந்து, வணங்கி பணிவன்புடன் திருவமுது சாப்பிட்டு எம்குடி முழுவதையும் காக்க வேண்டும் என்று அப்பூதியடிகள் வேண்டுகிறார்.

**மாதவ மறையோர் செல்வ மனை இடை அமுது செய்து**
**காதல் நண்பு அளித்துப் பல் நாள் கலந்து உடன் இருந்த பின்றை**
**மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்**
**நாதர் தம் பாதம் சேர்ந்து நல் தமிழ்ப் பதிகம் செய்வார்.**

**(பெரி.பா. 1829)**

மாதவம் செய்த மறையோர் ஆகிய அப்பூதியடிகளின் செல்வம் பொருந்திய வளமனையில் திருவமுது உண்டு பேரன்பு கொண்டு நட்பின் திறத்தால் பல நாட்கள் தங்கி இருந்தார் திருநாவுக்கரசர் என்று சேக்கிழார் அப்பூதியடிகளின் மூலமாக குறிப்பிடுகிறார்.

**அமர்நீதி நாயனார்**

திருநல்லூரில் சிவனடியார்க்கு திருவமுது செய்தற்பொருட்டுத் திருமடங்கட்டித் திருவிழாகாலத்தில் தம்முடையச் சுற்றத்தாரோடு அங்குத் தங்கியிருந்த அடியார்களுக்குத் திருவமுது அளித்து வந்தவர் அமர்நீதி நாயனார்.

**சிந்தை செய்வது சிவன் கழல் அல்லது ஒன்று இல்லார்**
**அந்தி வண்ணர் தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக்**
**கந்தை கீள் உடை கோவணம் கருத்து அறிந்து உதவி**
**வந்த செல்வத்தின் வளத்தினால் வரும் பயன் கொள்வார்.**

**(பெரி.பா. 504)**

இவர் சிவபெருமானின் திருப்பாதத்தை தவிர வேறு எந்த சிந்தையும் கொள்ள மாட்டார். அந்தி செவ்வண்ணார் திருமேனியை வணங்குபவர்களுக்கு திருவமுது தருதலும், ஆடையை கொடுத்தலும் தன்னுடையத் தொண்டாக கருதினார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

**மூர்க்க நாயனார்**

'கற்ற சூதன்' என அழைக்கப்படுபவர். ' ஆதி முதல்வர் திருநீற்றின் அடியானே பொருள்' என்றறிந்து சிவனடியார் ஒருவருக்கு, அறுசுவையுடன் கூடிய அமுதினை உண்பிக்க வைத்தப் பிறகுதான் உண்ணுதல் வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்துவந்தார்.

**தூய அடிசில் நெய் கன்னல் சுவையின் கறிகள் அவைஅமைத்து**
**மேய அடியார் தமைப் போற்றி விருப்பால் அமுது செய்வித்தே**
**ஆய பொருளும் அவர் வேண்டும் படியால் உதவி அன்பு மிக**
**ஏயுமாறு நாள் தோறும் இனைய பணி செய்து இன்புற்றார்**

**(பெரி.பா. 3621)**

தூய்மையான அன்னம், நெய், இனிய சுவையுடைய கறிகள் போன்றவைல் சமைத்து வரும் அடியார்களை, வரவேற்று முகமலர்ச்சியுடன் விருப்பத்தோடு அமுதினை உண்ணச் செய்து, பின் அவர்கள் விரும்பிய பொருளை அளித்து அதனால் மகிழ்ச்சி அடைந்தார். நாள்தோறும் இதனை தவறாமல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

மேற்கூறிய ஐந்து நாயன்மார்களும் அவர்களின் வாழ்வில் வறுமை நிலவிய போதிலும் பிறருக்கு உணவு உபசரிக்கும் எண்ணம் அவர்களிடையே மேலோங்கி இருந்தது இவர்களின் வரலாற்றின் வழி அறியமுடிகிறது.

வறுமை நிலையிலும் தன் இல்லத்திற்கு இல்லை என்று வரும் அடியவர்களுக்கு முகம் கோணாமல்,மனம் நோகாமல் முகமலர்ச்சியுடன் அவர்களை வரவேற்கும் பண்பு இருந்ததை நம்மால் பெரியபுராணம் வாயிலாக அறிய முடிகின்றது

தன்னுடைய பிள்ளையை உணவாக கேட்ட போதிலும் சற்றும் எந்த சலனமும் இன்றி சிறுத்தொண்டரும்,அவரது மனைவியாரும் அடி அவருடைய பசியினைத் தீர்க்க தன் பிள்ளை என்று கூட பாராமல் அடியவரின் பசி தீர வேண்டும் என்ற உயரிய செயலை நம்மால் இவரின் வரலாற்றின் வழி காணமுடிகின்றது.

இளையான்குடி மாற நாயனார் தன் வீட்டிற்கு வந்த அடியவருக்கு தன் கழனியில் விதைத்த நெல்லை இரவு வேளையில் மழை பெய்யும் பொழுது அந்த விதை நெல்லையும், குப்பைக்கீரையும் கொண்டுவந்து படைக்கின்றார்.இவ்வாறு, எந்த ஒரு தொழில்நுட்பமும் எந்த ஒரு கருவியும் அந்த காலத்தில் இல்லாத போதே அவர்கள் அடியவர்களின் மீது வைத்த பற்றைப் பார்த்து வியப்பு ஏற்படுகின்றது.

தற்போது, நவீன காலகட்டத்தில் மக்களிடம் அனைத்தும் இருப்பினும் பிறருக்கு கொடுக்கும் பண்பு குறைந்து கொண்டே போகின்றது என்பது வருத்தத்துக்குரியது. மக்களாகிய நாம் இனி வரும் தலைமுறையினருக்கு ஒரு வேளையாவது இல்லை என்று கூறாமல் வரும் வறியவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும்.

**துணை நின்ற நூல்கள்**


1. **கிருபானந்த வாரியார்- பெரியபுராணம்,குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை 600 002.**
2. **புலவர். சு. சடையப்பன், எம்.ஏ., பி.எட்., அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.**
3. **புலவர் அழகர்சாமி கற்பகம் புத்தகாலயம், தியாகராய நகர், சென்னை- 600017.**
4. **பி.ரா. நடராசன் - பெரிய புராணம், உமா பதிப்பகம், சென்னை - 600 001.**
5. **பி.ரா. நடராசன் திருநாவுக்கரசர் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை - 600 001.**
6. **பன்னிரு திருமுறைகள் தொகுப்பு வர்தமான் பதிப்பகம், சென்னை -636 017.**